

பட்டத்தரசி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பட்டத்தரசி

கவிஞர் சுரதா

முத்து நூலகம்

8-ஏ. பைக்ராப்ட்ஸ் ரோடு, சென்னை-5

முதற் பதிப்பு-ஜூலை, 1956

விலை 0—12—0

அச்சிட்டோர்.
ஜமாலியா பிரஸ்,
சென்னை—14.

# பதிப்புரை

உவமைக் கவிஞர் சுரதா அவர்களைத் தங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில்; அவர் ஒவ்வொருவர் இதயமும் இனித்திட, என்றும் அழியாத கவிதைகளை உருவாகித் தந்துள்ளார். உருவாக்கிக்கொண்டும் இருக்கிறார். அப்படி உருவக்கிய கவிதைகளில் முத்து நூலகத்தார் வெளியிடும் முதற் கவிதை; இதோ இப்பட்டத்தரசி! பவனி வரும் இப்பட்டத்தரசி; உங்கள் ஒவ்வொருவர் இயத்திலும் இன்பம் கொடுத்து; உங்கள் அன்பான ஆதரவை தேடித் தருவாள் என்ற நம்பிகையிலும்; மேலும் இதுபோன்ற கவிதைகளை வெளியிட ஊக்கம் தருவீர்கள் என்ற உறுதியிலும் உலவச் செய்திருக்கிறோம்.

பதிப்பாசிரியர்.
முத்து.

# உள்ளே

வாசல்

சோலையில் ஓர் நாள்

கவிஞன் கவலை

ஆயிரம் பொன்

அங்கங்கே

ஆரியத்தின் அச்சம்

தோற்றான்—வென்றாள்

தேய்ந்த கனவு

கூத்தாடி மீசை

## ........வாசல்

கொடுத்துச் சிவந்த குமணன் கைபோல
மேற்குவான் சிவந்து விளங்கு கின்றது.
பொன்செய் கொல்லர் பொழுதுநிலை அறிந்து,
அடிக்கும் கருவியை ஒடுக்கு கின்றனர்.
ஒலைக் கணக்கரின் வேலைநிற் கின்றது.

சந்தனப் பொதிகை தனைவிட் டெழுந்து
தென்றல், சோலையைத் தேடிவரு கின்றது.
எதிர்பார்த் திருந்த மதுமலர்க் கூட்டம்,
வந்த காற்றுக்கு, மணந்தரு கின்றது.

குருத்து நிலவே! கொல்லிப் பாவையே!
கண்ணே! மணியே! கனியே! சுவையே!
பூவிற் சிறந்த தாமரைப் பூவே!
பாவிற் சிறந்தநே ரிசைவெண் பாவே!

என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்தும்;
கட்டித் தழுவியும்; கனிஇதழ் ஊன்றியும்,
தொட்டும் சுவைத்தும்; தோள்தலில் சாய்ந்தும்,
ஒருவர் நிழலில் ஒருவர் ஒதுங்கி,
இருவரெனும் தோற்றம் இன்றி இருந்து;
இனிமைத் தனிமையில் தினந்தினம் மகிழும்
காதலர் இருவர் கனிமொழி பேசி,
வரிநிழல் வழங்கும் சோலைவரு கின்றனர்,

தலைவன், காமச் சங்கீதம் பாட,
தலைவி, சுவைத்துத் தருகிறாள்: முத்தம்!

அதற்குப் பின்னர், அந்த அணங்கு,
பார்வையால் தூய பளிங்கு காட்டியும்,
காம்பு மூங்கிலைத் தோள்தனில் காட்டியும்,
சில்வை இடைதனில் மின்னல் காட்டியும்,
ஆங்கொரு புறத்தில், காற்றினால் ஆடும்,
அஃறிணை மலர்க்கொடி அருகினில் நின்று,
எதிரே நிற்கும் இளமை அழகனை
மாவடுப் பார்வையால் 'வாருங்கள், என்கிறாள்.

மதிவட்ட முகமும்; புதுமான் விழியும்,
உடையும், இடையும், ஒவியத் தொடையும்,
அல்லிப் பூஇதழ் அளித்திடும் சாயமும்;
அணங்கின் முழுஉடல் அழகும்; காதலன்
கண்ணையும் மனத்தையும் கவருகின்றன

பாவையைச் சுகிக்கும் பருவக் காதலன்;
தையலின் தளிருடல் சாயலைப் பார்த்து,
மயில்தனை நெஞ்சில் வரவழைக் கின்றான்.
அணங்கின் வாயிதழ், அடிக்கடி திறக்கும்
பதினாறு அரும்புப் பற்களின் நெருக்கம்,
பவளப் பெட்டியில் வைத்தமுத் துச்சரம்!
என்று எண்ணி இதயம் குளிர்கிறான்.

கருமணல், மேகம், பாசி, கொன்றைக்
காயொடு மையிருள் போன்று விளங்கும்,
கூந்தலின் வனப்பைக் கூர்ந்து பார்க்கிறான்.

அந்தச் சமயம் அங்கொரு வண்டு

பருவ மடைந்த நிருவாண மலரின்
வாயைச் சுவைத்தும்; மதுவுண்டு மயங்கியும்;
பாட்டுப் பாடிப் பறந்துதிரி கின்றது!

வாலிபன் அந்த வண்டினை நோக்கி;
அந்தி மலர்களைச் சந்திக்கும் வண்டே!
பறக்கும் நாவற் பழமே! ''நாங்கள்,
மலரைத் தொடுக்கும் மானிடர்; நீயோ,
மலரில் படுத்து மன்மதச் சுவைபெறும்
மரகதச் சோலையின் மருமகப் பிள்ளை!

கத்தூரிக் கறுப்பே! வெண்மையின் எதிர்ப்பே!
அசைந்து நடக்கையில், அன்னம் போலவும்;
எழுந்து நிற்கையில், இளங்கொடி போலவும்;
படுக்கையில் ஓவியம் பாவை போலவும்;
காட்சி தந்திடும் காமச் சித்திரம்!

ஒருவிழி யால்என் உடல்தனைச் சுடுவாள்.
மறுவிழி யாலே, மருந்து போடுவாள்:
அவளோ, அணைப்பவள்; சுவைப்பவள்; ஆடை அவிழ்ப்பவள்;
உடலைப் பொருத்தும் நட்பினை உடையவள்.

பூவின் பொடியையும், பொங்குசெந் தேனையும்,
அன்றாடம் நன்குநீ ஆராய்ச்சி செய்கிறாய்;
அதனால், மலர்களின் ஆராய்ச்சி தன்னில்,
உனக்குமேல் அனுபவம் ஒருவர்க்கு மிராது!

ஆதலால், பறக்கும் ஆறுகால் வண்டே!
உன்னிடம் ஒன்று கேட்க நினைக்கிறேன்.
எனது தலைவியின் இளங்கூந்தல் போல,
மணத்தை வழங்கும் மதுமலர் உண்டோ?
பாட்டை நிறுத்திப் பதில்சொல் வண்டே!

எனது உள்ளம் இனிப்பதற் காகவோ,
இவ்வூ ரினன்யான் என்பதற் காகவோ,
உளத்தில் உள்ளதை, உதட்டால் மாற்றாது;
உண்மை உரைத்திடு, கன்-மை வண்டே!
என்று அந்த, இளைஞன் கேட்கிறான்.

சங்கப் புலவர் தந்துள்ள நூற்களுள்,
குறுந்தொகை என்பதும் ஒன்று; சற்றுமுன்
மேலே கூறிய கருத்தினை விளக்கும்
பாட்டு, அந்த ஏட்டில்ஒன் றுள்ளது.
அந்தப் பாட்டு, அடியில் வருமாறு:

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பீ,
காமம் செப்பாது கண்டது மொழிமோ,
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே—

இதனைஇயற் றியவர் இறையனார் ஆவர்.

தலைவன் ஒருவன், தனது தலைவியின்
மழைக்குழல் வழங்கும் மணத்தைக் குறித்து,
மலர்மீது படியும் வண்டி னிடத்தில்,

கேட்பது போல அமைந்து உள்ளது,
அகவல் ஓசையால் ஆனஇப் பாடல்.

பாட்டின் தலைவன் பாண்டிய வேந்தனா?
சேரனா? சோழனா? செந்தமிழ் வீரனா?
ஆமையின் முதுகில் அரிவாள் தீட்டி,
செந்நெல் அறுவடை செய்யும் உழவனா?
என்பதும், அவன்பெயர் என்ன என்பதும்;
செய்யுள் வரிகள் தெரிவிக்க வில்லை.

மயிலின் சாயலைக் காட்டும் தலைவிக்கு,
எந்தவூர்? அவளுக்கு என்னஎன்பதும், பேர் ?
இந்தக் கவிதை எழுத்தினில் இல்லை.

மன்னன் உதட்டினை மதுவினால் கழுவியும்;
அன்னோன் அருகினில், நங்கையை நிறுத்தியும்;
வீரம் ஒடுக்கியும்; மயக்கம் வளர்த்தும்;
பொய்யும் வழுவும் புகுத்திற்று ஆரியம்!

சங்கநா கரிகம் சரிந்து, பின்னர்
இத்தமிழ் நாடு இருட்டில் இருக்கையில்,
குறள்நூல் தூங்க; கீதைத் தத்துவம்,
எல்லோர் நாவிலும் செல்வாக்குப் பெற்றது.
புலவரும், பருத்திப் பூணூல் மனிதரும்,
மெய்ப்பொரு ளோடு பொய்ப்பொருள் கூட்டினர் !
பொய்மைக்கு இலக்கியப் புலமைசெல வழிந்தது.

வரலாற்றின் மீது வளர்ந்தது புராணம்.
அந்தணச் சாதி ஆயிற்று, வெண்பா!

அஞ்சிப்பா ருத்திர வருணமா யிற்று!

அந்த முறையில், இந்தக் குறுந்தொகைப்
பாடலும் ஒருவனால் புராணமா யிற்று!
பிழைப்பைக் கருதி, பிழைபுரிந்து விட்டான்,
ஆரியத் தமிழன், அறிவு இருண்டவன்.

அகச்சுவை என்னும் அளிக்கும்இப் பாடலைப்
புராண மாக்குமுன் இந்தப் புலவன்,
மதுரையை நினைக்கிறன்; பாண்டியன் முளைக்கிறன்.
பாண்டியன் முளைத்ததும், சங்கம் வருகின்றது!
சங்கம் வந்ததும், பின்னர் நக்கீரச்
சிங்கம் வருகிறன்; திரும்பவும் நினைக்கிறன்.
தருமி என்னும் தரித்திரப் பார்ப்பன,
இளைஞனைக் கதையில் இணைத்து வைக்கிறன்.

இயற்கையில் கூந்தலுக் கில்லை வாசம்
மங்கையர் குழலுக்கு மாமணம் உண்டு—
வாதிப் பிரதி வாதி போல,
இரண்டு பிளவுகள் - நேரெதிர் நினைவுகள்!
இந்தஎண் ணங்களை இழுத்துச் சேர்க்கிறன்.

கற்கண்டுப் பாடலை இயற்றிய கவிஞர்
இறையனர் தன்னை, இறைவனுக்கு கின்றன்.

சக்ர வர்த்தித் திருமகன் இராமனை,
வான்மீகி, ஆண்டவன் ஆக்க வில்லை.
கம்பனே, இராமனைக் கடவு ளாக்கினன்.

வான்மீகி என்ற மானிடக் கவிஞன்,
தவறு செய்யாத சரித்திரக் காரன்!
இந்நாட்டுக் கம்பனோ எழுத்துத் தரகன்!

சங்க காலத்துத் தமிழன் எழுத்தில்,
சாதிகள் இல்லை, சடங்கு கிடையாது.
மனிதரைப் பிரிக்கும் மதங்களைக் காணோம்!
அவர்கள் கவிதையில் வருகின்ற ஆடவன்,
பூவைச் சூடுவான்! பிறைசூட மாட்டான்.
வெண்மை நிலவுக்கு விண்தான் வீடு,
ஆண்டவன் முடிக்கு அதுஎப் படிவரும்?

நலந்தரும் காவிரி முதலிய நதிகள்,
தரையில் இருக்கும், தலையில் இராது.
பசலை நிலாவரும்! பனிதரும்; அந்நிலா,
குளிர்ந்த வானைக் கொப்புளப் படுத்தும்!
பருதி உதித்திடும் பகற்பொழுது தன்னை,
இரவுப்புறம்—என்று எழுதினர் முன்னோர்.
சூரியப் பிரசவம் என்றனர், பின்னோர்!
இறகுகள் மலைக்கு இருந்தன என்றும்;
யானை மலரெடுத்து அர்ச்சித்த தாகவும்,
நக்கீரன் நட்கள் எழுதவே இல்லை!
புராண நூற்றாண்டே புரிந்தது இப்பிழை!

திருவிளை யாடல் செய்திக் கதைப்படி;
பைந்தமிழ்க் குறுந்தொகைப் பாட்டுடைத் தலைவன்
மன்னன் செண்பக மாறனும்! அந்தக்
கொற்றவன் தலைவிதான் கோப்பெருந் தேவியாம்!

தந்தையும் பெற்ற தாயும் இல்லாத,
தரித்திரப் பார்ப்பான் தருமி என்பவன்
மதுரைச் சோம சுந்தர விடத்தில்,
இனிக்கும் திருமணம் இன்றி தவிக்கிறேன்
பரிசுச் செய்யுள் பாடித் தருவீர்—
என்று கேட்கிறான், ஆலயம் வந்து!

கேட்பவன் ஆரியன்! தமிழன் அல்லன்!
அருள்புரி கின்றான் நெற்றிக்கண் ஆண்டவன்.

பார்ப்பனன் கேட்க, பார்ப்பன பகவான்,
ஏதும் கூறாது எழுதித் தருகிறான்.
இங்கே "அவாளின்" இனத்தின் உணர்ச்சி
இலைமறை காயென இருக்கின்ற தல்லவா?

மதுரைச் சொக்க நாதன் என்பவன்
அந்நாள் ஆரியர்க்கு ஆச்சாரி யாக
இருந்து இருப்பான் என்று நினைக்கிறேன்.
இல்லையேல், மதுரை இறைவன் தருமிக்கு
இவ்வளவு பரிவு ஏன் காட்ட வேண்டும்?

பாடலைத் தந்த பார்வதிக் கணவன்;
பரிசு பெற்றிடப் பாடலும், நீயோர்
அணங்கை மணந்திட ஆயிரம் பொன்னும்,
வேண்டுவ தெல்லாம்வேண்டாம்' அம்பி.

நேரடி உனக்கு நன்மை செய்கிறேன்,
கொஞ்ச நேரம் பொறுஎன்று கூறி......

நீல வானத்து நிலவின் வடிவையும்,
கொம்பைத் தழுவும் கொடியின் வளைவையும்,
புல்நடுக் கத்தையும்; பூவின்மென் மையையும்;
செங்கதிர் ஒளியையும், பனிநீர்த் துளியையும்;
காற்றின் சஞ்சலத் தன்மை தன்னையும்;
முயலின்கூச் சத்தையும், மயிலின் செருக்கையும்;
கூவுங் குயிலின் குரலையும்; இவற்றொடு,
வைரக் கல்லின் உறுதி—மலர்தரும்
தேனின் இனிமை—தீயின் வெப்பம்
மாவின் மருட்சி இவற்றையும் சேர்த்து,

பெண்உரு என்று படைத்து, ஈசன்;
இந்தா மணமகள், இவளை மாலை
இட்டு 'ஆரிய இல்லறம்' நடத்துக,
என்றுஏன் உதவி இருத்தல் கூடாது?
எல்லாம் செய்ய வல்ல சித்தர்க்கு
இதுஒரு பெரிதா பக்தி மான்களே?

யானையின் தலைபோல் அமைந்த சங்கை,
கீர்கீர் என்னும் கீரனே என்கிறுன்;
வாதம் புரிந்திட வந்த இறைவன்.

சங்கு அறுத்துப் பிழைப்ப தெம்குலம்,
சங்கர ஞர்க்கு ஏதப்பா குலம்?
என்றுநக் கீரன் எதிர்த்துக் கேட்கிறுன்;
அஞ்சாத வீரத் தமிழன் ஆதலால்!

பொருட்குற்றம் உடையது பாடல் என்கிறன்.
நாவில் வல்ல நற்றமிழ்க் கீரன்.

இந்தநக் கீரனுக் கின்னும் சரியாய்
இலக்கண விளக்கம் ஏற்பட வில்லை.
ஆதலால், இவனுக்கு அகத்தியனைக் கொண்டு
பொருளிலக் கணத்தைப் போதனை செய்யச்
சொல்ல வேண்டும் ''என்று, சொல்கிறன்;
பார்வதி மாதிடம், பஞ்சாங்கக் கடவுள்!

மறுத்து வாதிட வல்லமை இருந்திடில்'
இல்லை, இல்லை! இதுதான் உண்மை!
என்று நிலைநாட்டி இருத்தல் வேண்டாமா ?
தானு ஞட்டித் தனது நிறுப்பே-
எனுக்குத் திரப்படி, இந்த முண்டம்?

பொருளி லக்கணம் புரியாதாம் அவனுக்கு;
சுருக்கவிழ்ந்த குடுமிச் சொக்க நாதன்
அளக்கிறன் ஆரியப் பார்வதி இடத்தில்

பெரியார் அவர்கட்கு, அறிவோ, ஆற்றலோ,
இல்லை என்று இயம்புதல் போலவும்;
அறிஞர் அண்ணு அவர்கட்குப் பேசத்
தெரியாது என்று தெரிவித்தல் போலவும்;
கொடுவாள் தன்னை எடடா' என்று
பாடிய புரட்சிக் கவிஞர்க்குக் கவிதை
எழுதத் தெரியாது என்பது போலவும்;
இருக்கின்ற தான்றே இவன்வாய்ச் சொற்கள்!

நீரிலே அந்தக் கீரனை நிறுத்தி,
கோயில் மனிதனைக் கும்பிட வைத்து,
கோபப் பிரசாத மெனும்பிர பந்தம்
பாட வைக்கிறுன் பண்டிதப் புலவன்!

எவ்வளவு மாற்றம்! எவ்வளவு புளுகு!

குறுந்தொகைப் பாடல், திருவிளை யாடலாய்
ஆகும் போது; அந்தச் செய்யுள்,
பட்டத் தரசி ஆனல் என்ன ?

கலைஞர் கருணு நிதியார் நடத்தும்,
முரசொலி இதழில் முன்பே, ஒருமுறை
வந்து உள்ளது, இந்தக் கவிதை

எனது கவிதைகள் இவ்வளவு தூரம்
பரவுவ தற்குப் பழைய நண்பர்,
கருணு நிதியே காரண மாவார்,
அவருக்கு எனது ஆயிரம் நன்றி !

பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி மிகுந்த
ஜமாலியா அச்சக அதிபர் ஜமாலுத்தீன்
அழகொடு இதனை நன்கு அச்சிட்டு
தந்துளார், அவர்க்கு என்றும்என் நன்றி

சந்து நூல்தரும் முத்து நூலகம்,
இச்சிறு கவிதையை அச்சில் அழுத்தி,
நூலாக்கி யுள்ளது, நன்றி அதற்கே !

சென்னை
15-7-'56

சுரதா

## இவர்கள் சொல்லுகிருர்கள்

* ஊரறிந்த பேரறிஞர்; புலவர்; நீங்கள்
உயிரெழுத்தைச் சமயத்தில் மறந்து போவீர்

—பாண்டியன்

* பதருள்ள பக்கத்தில் தமிழன்; செந்நெல்
பட்டறையின் பக்கத்தில் பூணூல் பார்ப்பான்

—நக்கீரன்

* ஊர்கெடுப்போம்; இதுநமது வாழ்க்கை வேலை!
உலைவைப்போம் இது நமக்குச் சுலபம்; ஆனால்
ஏர்பிடித்து உழுவதற்கா தெரியும்

—பரமசிவன்

* எரிந்துவரும் விறகன்றே பொருளில் லாது
இன்னலிலே வாடுகின்ற இளமைக் காலம்

—பார்வதி

——***——

# பட்டத்தரசி

## சோலையில் ஓர் நாள்

கூடுகட்டத் தெரியாத குயிலின் கூட்டம்
கூவுகின்ற சோலைதனில் உலவிக் கொண்டே,
பாடுவதும்; ஆங்குள்ள அழகை, உற்றுப்
பார்ப்பதுவு மாயிருந்தான் பாண்டி வேந்தன்
காடுபடு திரவியங்கள் ஐந்துள் ஒன்றைக்
கண்டெடுத்தேன் பாருங்கள்—என்று கூறி,
ஆடுமயில் இறகுதனைக் காட்டிக் கொண்டே
அவனருகில் பட்டத்து அரசி வந்தாள்!

சிங்கத்து ஆசனத்தில் செங்கோல் ஏந்தி,
தேசத்தை அரசாள்வோன்; அவளை நோக்கி
செங்கரும்பு போல்உனது அங்க மெங்கும்
தித்திப்பு வைத்திருக்கும் பெண்ணே! மாதர்
சங்குநிறப் புன்னகையைக் கண்டால், கொம்பைத்
தழுவும்வெண் முல்லைகளும், மலரும் என்பர்.
மங்கையர்கள், மாமரத்தைக் கூர்ந்து பார்த்தால்,
மாமரமே பூத்திடுமாம், மெய்யா? பொய்யா?

எங்கே நீ மரத்தைப்பார்; உன்னைக் கொஞ்ச
எதிர்பார்க்கும் என்னைப்பார்—என்று கூறி,
தங்கநிற அங்கத்தைத் தொட்டான், தொட்ட
தமிழரசன் உதடுதனை உதட்டால் தொட்டாள்!
தொங்குகின்ற கூந்தல்தனை எடுத்து, வேந்தன்
தோள்மீது விட்டெறிந்தாள்; பிடித்தான் மன்னன்.
சிங்காரப் பூங்குழலில் பிறந்த வாசம்
சிந்தனையில் ஆழ்த்திற்று; மௌன மானான்!

தென்றலினால் மேலாடை நழுவ, அந்தத்
தேர்வேந்தன் கரம்பட்டு முழுதும் நீங்க,
இன்பத்தின் முதற்கட்டம் முடித்து நின்ற,
ஈரநிலா வதனத்தாள், அவனை நோக்கி;
பொன்மலையே! நான்தழுவும் சிலையே! ஏனோ
பூரிக்கும் போதிந்த மௌனம்?—என்றாள்.
இன்னமுதே! மங்கையரின் கூந்தலுக்கு,
இயற்கையிலே மணம் உண்டா?—என்று கேட்டான்.

பெருங்கவிஞர் சபைகூட்டித் தமிழைக் காக்கும்
பேரரசன் இவ்வாறு அவளைக் கேட்க,
நிருவாணச் சுவைஇன்பம் அனுப விக்கும்
நிலாசுர நேரத்தில், கூந்தல் பற்றி,
விரிவாக ஆராய்வோம்; எனக்கிப் போது,
வேண்டுவது, 'காதலரின் கதைகள்'—என்றாள்.
அரசாள்வோன் கதைசொன்னான்; அணங்கு கேட்டாள்;
அந்திவெயில் முற்றிற்று! எழுந்தார், சென்றார்.

## கவிஞன் கவலை

அதிவேக மாய்ஓடும் குதிரை, தன்னை
அரபியர்கள் நம்நாட்டுக் கனுப்பு கின்றார்.
மதுக்கலசம், கண்ணாடி, மயிலின் தோகை,
மற்றவர்கள் அனுப்புகின்றார்; வடக்கு வேந்தன்,
பொதியமலைச் சந்தனத்தை அரைப்ப தற்குப்
பருவட்டக் கல்லனுப்பி, எச்சில் முத்தம்
பதிவாக்கப் பெண்டிரையும் அனுப்பு கின்றான்.
பாண்டியன் அத் தூண்டிலுக்கு மீனா கின்றான்.

பார்ப்பனர்கள் நம் நாட்டில் நுழைந்து, எல்லாப்
பதவியையும் கைப்பற்றிக் கொண்டு, நம்மை
வேர்பறித்து வருகின்றார். இந்த சூழ்ச்சி
வேந்தனுக்குத் தெரியாது; உணர்த்தி னாலும்,
நீர்மீது கொள்ளிதனை வைத்தல் போன்ற
நிலையேதான் நிச்சயமாய் ஆகும். இந்த
ஊர்மக்கள் உயிரற்ற கற்கள்! நாட்டு
உணர்ச்சியில்லை, தமிழர்க்கு எழுச்சி இல்லை!

கிளிஞ்சிக்குள் வெண்முத்து வைத்து மூடிக்
கிலுகிலுப்பை போல்ஆட்டும் மதுரை மூதூர்,
அளித்துள்ள செல்வத்தை, பிழைக்க வந்தோர்
அனுபவிக்க விட்டுவிட்டோம்; வீழ்ச்சி யுற்றோம்;
தளர்ந்துள்ளோம்; தாழ்ந்துள்ளோம்; சங்க காலத்
தமிழ்வாழ்வை மறந்துள்ளோம்; இதனை நாட்டில்
விளக்குகின்றோம்; எழுதுகின்றோம்; பேசு கின்றோம்;
வேண்டுமென்று நம்மவனே எதிர்க்கின் றானே!

இளம்பருவம் உடையவர்கள். தம்மு டம்பின்,
எடைபார்க்க முயல்கின்றார் அன்றி, நன்கு
வளர்ந்துளதா நம்மறிவு? நேற்றைக் கின்று,
வாழ்வினிலே உயர்ந்தோமா? வாழ்ந்த வாழ்வு
வளைவானேன் ? என ஆய்ந்து பார்த்து, தக்க
வகைதேட ஓர்இளைஞன் நாட்டில் இல்லை!
விளையாட்டு மந்திரிகள்; மயங்கும் மன்னன்;
வேதியரின் காலடியைக் கழுவும் மக்கள்!

மதம் வேண்டும் என்கின்றார்; மதமா வேண்டும்?
மதிவேண்டும்; மதிவளர்க்கும் கல்வி வேண்டும்;
சதமல்ல வாம்வாழ்வு ! சதமா அல்ல ?
சதமல்ல என்பவர்க்கேன் வீடு வாசல் ?
பதருள்ள பக்கத்தில் தமிழன்! செந்நெல்
பட்டறையின் பக்கத்தில் பூணூல் பார்ப்பான் !
இது சரியா? இது நெறியா? இருக்கலாமா?
எனக்கேட்க ஆள்ஏது நம்மை அன்றி ?

இவ்வாறு மைத்துனனைப் பார்த்து ஓர்நாள்
எடுத்துரைத்தான் நக்கீரன்; அன்னோன் கேட்டு,
எவ்வியென்போன் கொடையாலும்; தந்து மாறன்
என்பவனின் புகழாலும் சிறந்த நாட்டை,
இவ்வாறு சீர்குலைத்தக் கயவர் தம்மை
இப்போதே சாக்காட்டுக் கனுப்ப வேண்டும்.
அவ்வாறு செய்தாற்றான் மீள்வோம்; இன்றேல்,
அனைவருமே விலங்கடிமை ஆக நேரும்

என்றிட்டான் ஆவேச உணர்ச்சி யோடு.
இதைக்கேட்ட நக்கீரன் அவனை நோக்கி;
உன்னைப்போல் பேரெழுச்சி உடையோன், நாட்டில்
ஒருவீதிக் கொருதமிழன் இருந்தாற் போதும்.
குன்றுதனை தகர்த்தெறிய உளிகள் வேண்டும்;
கொல்லும் நோய் தனைக்கொல்ல, மருந்து வேண்டும்;
இன்றில்லை மருந்து—உளி இரண்டும்; அம்பு
இல்லாமல் வில்லெடுத்துப் பயன்யா—தென்றான்.

எழுதாத தாமரைப்பூ,.கீரன் கொஞ்சும்,
இளம்மனைவி, அங்குவரக் கண்டு, அந்தப்
பழக்குலைமேல் பார்வைதனை அனுப்ப; அன்னோன்
பார்வைதனைப் பார்வையினால் வாங்கிக் கொண்டாள்.
மழைபோன்ற குளிர்முத்தம் தின்றிருப்பான்,
மைத்துனன் அங் கில்லாது இருந்திருந்தால்!
எழில் நிறமே! சிற்றுண்டி கொணர்க—என்றான்.
இனிமேல் தான் செய்தாக வேண்டும்—என்றாள்.

இன் சுவையே! எங்கள் இரு வர்க்கு மட்டும்
ஏதேனும் சிற்றுண்டி செய்க—என்றான்.
என் வயிற்றுக் கென்செய்வேன்—என்று, அந்த
இலவம்பூ வாயழகி அவனைக் கேட்க;
தின்னுதற்கா உனக்கொன்றும் இல்லை; நீதான்
தினந்தோறும் புளி, சாம்பல், தின்கின் றாயே.
என்றிட்டான் நக்கீரக் கவிஞன், அன்னோன்
இதழ்விரிவு, வரிச்சிரிப்பு வழங்கிற் றாங்கே!

சித்திரத்துக் ஒத்திருக்கும் மங்கை, கீரன்
தேனுதட்டின் உட்கருத்தைப் புரிந்து கொண்டு,
முத்துப்பல், கரும்புச்சொல், இரண்டும் தந்தாள்-
முதுபுலவன், விடைபெற்று வெளியே சென்றான்.
அத்தனை வெல்லுகின்ற அறிஞன், இன்று
ஆருமில்லை, தமிழ்நாட்டில் அக்கா—என்றான்.
சித்திரைக்குப் பின்பாரேன், என்வ யிற்றின்
சிரஞ்சீவி பிறந்தவுடன்—என்றாள் நங்கை.

ஆசையொடு இவ்வாறு தமக்கை சொல்ல,
அதைக்கேட்ட பின்அன்னுன் உள்ளே செல்ல,
வாசமலர்க் கூடையொடு, கீரன் வீட்டு
வாசலிலே வந்தொருத்தி, 'அம்மா' என்ருள்.
பூசைக்கோ, சாமிக்கோ, இதுநாள் மட்டும்
பூவாங்கி அறியாத அந்த நங்கை,
ஆசைக்கும், மஞ்சத்தில் தெளிப்ப தற்கும்,
அவளிடத்தில் அழகுமலர் வாங்க லுற்ருள்.

## ஆயிரம் பொன்

அரசனொரு பக்கத்தில்; அன்னோன் பக்கம்,
ஆணிப்பொன் ஆசனங்கள்; அதில மைச்சர்;
விரல்தடவி யாழ்மீட்டும் பாணன் ஓர்பால்;
வேய்ங்குழலின் மீதுள்ள துளையைப் போல,
வரிசையொடு அமர்ந்தபடி புலவர்க் கூட்டம்;
மன்றத்துச் சேவகர்கள், தூணுக்குத் தூண்.
மரக்கொம்பில் தொங்கும்ஓர் கனியைப் போல,
மண்டபத்தின் உச்சியிலே, தூங்கும் செம்பொன்!

சீர்பாடி னான்ஒருவன்; பாண்டி வேந்தன்
செயம்பாடி னான்ஒருவன்; கலிவெண் பாவால்!
தேர்பாடி னான்ஒருவன்; பின்னர், முல்லைத்
திணைபாடி னான்ஒருவன்; வைகை யாற்று,
நீர்பாடி னான் ஒருவன்; போரில் வென்ற
நிலைபாடி னான்ஒருவன்; கடவுள் மீது,
ஓர்பதிகம் பலர்பாட, முடிவில், கீரன்;
உயர்தமிழே! தாய்ப்பாலே! வாழ்க!—என்றான்.

அரசாள்வோன் முன்னமர்ந்தான் பின்ன மர்ந்தார்
ஆங்குள்ளோர், ஆசனத்தில் ! மன்னன் அந்த,
பெரும்புலவன்; தமிழ்ச்சங்கத் தலைவன்; வெல்லும்
பேச்சறிந்த நக்கீரன் தன்னை நோக்க;
வரிவேங்கைப் புலிமன்னன் குறிப்ப றிந்து,
வாடாத பேரறிஞன் சபையைப் நோக்கி,
தரைமெச்சும் புலவர்களே!—என்றான் கீரன்.
தமிழ்மெச்சும் புலவரெலாம் அவனைப் பார்த்தார்.

கடவுளுக்கு நம்மைப்போல் உருவம் உண்டா?
கண்ணுக்கா? மனத்திற்கா? காட்சி இன்பம்?
உடையாத கண்ணாடி; நெய்யா ஆடை;
உலகிலுண்டா? பறப்பதெது? இறகா? காலா?
படைப்பு எது?'' எனநம்மை நேற்றுக் கேட்ட
பார்த்திபர்க்கு, இப்போதோர் பெருஞ் சந்தேகம்;
இடைதுவளும் ஏந்திழையார் கூந்த லுக்கு,
இயற்கையிலே மணமுண்டா? இதுதான் கேள்வி?

வெள்ளியிலே வளர்ந்தவர்கள், பழமை யான
வேதத்தைப் போற்றிடுவர். ஆனால் நாமோ,
கேள்வியிலே வளர்ந்தவர்கள்; நமக்கோ, நல்ல
கேள்விகளே; பலாச்சுளைகள், பருகும் செந்தேன்!
நாள்கிழமை தனில்இல்லை, மனிதன் வெற்றி,
நன்றாக உழையுங்கள் சிந்தி யுங்கள்;
ஆள்பவரின் ஐயத்தைத் தீர்த்து வைத்தால்,
ஆயிரம்பொன், வென்றவர்க்கு வந்து சேரும்!

இறப்பதுவும் பிறப்பதும்; வையந் தன்னில்,
எல்லோர்க்கும் பொதுநிகழ்ச்சி; மனிதன் வாழ்வில்;
திறமைகள்தான், உண்மைவர லாறு ஆகும்.
சென்றதிசை, நின்றவிடம், மண்ணில், விண்ணில்,
இறவாத புகழ்வைத்தல் வேண்டும். வாழ்வு,
இனிப்பதற்கும், சிறப்பதற்கும், செல்வம் வேண்டும்.
மறந்துவிடக் கூடியதா இந்த எண்ணம்?
மறுநாள்யாம் சந்திப்போம்,—என்றான் கீரன்.

## அங்கங்கே

பாண்டியனின் பொன்முடிப்பு விளக்கந் தன்னைப்
பறைசாற்றிக் கொண்டொருவன் சென்றான். நாட்டில்,
தூண்டுகின்றான் தமிழுணர்ச்சி நமது பாண்டித்
துரைத்தேவன் என்றிட்டார்—செய்தி கேட்டோர்.
நீண்டநிழல் போல்தொடரும் வறுமை தன்னை;
நிச்சயமாய்ப் புலவரெலாம் துரத்து தற்கு,
ஆண்டாண்டு தோறும் நாடாள்வோன் நெஞ்சில்,
ஐயங்கள் அதிகரிக்க வேண்டும்—என்றார்.

*         *         *

தின்பண்டச் சிறுவர்களைப் பார்த்துக் கேட்கும்
சிறுகேள்வி! இதற்கா ஓர் ஆயிரம் பொன்!
நன்றுநன்று! மன்னவனின் ஐயம்," என்று
நடுவீதி தனிலிருவர் பேசிக் கொண்டார்.
மன்றத்தில் பரிசுபெற, மேகம் சிந்தும்
மழைத்துளிபோல் கணக்கற்றோர் வருவர்; செய்யுள்
ஒன்றுக்குத் தான்பரிசு! தோற்ற பாடல்,
ஊர்நோக்கித் தோல்வியொடு திரும்பும்" என்றார்.

*         *         *

கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டு, என்று
கூறுகின்றார் என்கணவர்—என்றாள் ஓர்பெண்;
வேந்தனது போட்டிதனில் கலந்து கொள்வார்
வீட்டரசர் நாளைக்கு'' என்றாள் ஓர்பெண்.
மாந்தளிரே; இதழ்எங்கே? என்று கேட்கும்
மணவாளர், கூந்தல்தனைக் கேட்டார்—என்று,
சாந்தணிந்த மலைவஞ்சி என்னும் மங்கை;
தனம்என்னும் தையலிடம் எடுத்துரைத்தாள்.

## ஆரியத்தின் அச்சம்

விதம்விதமாய் ஆபரணம்; அதுபோல் ஆடை;
வேளைக்கு ஓர்உணவு; உண்டு வாழும்
எதிர்வீட்டு இந்துமதி போல, யானும்
இன்பத்தை அடைவேனு, வாழ்வில்? என்று,
மதுவோநல் மணமோ இவ்விரண்டும் இல்லா,
மலர்போன்ற பார்வதியாள் ஏங்கும் போது,
அதிகாரக் குரலோடு அவளை, மிக்க
அவசரமாய்ப் பரமசிவன் அழைக்க லுற்றான்.

எதற்காக அழைத்தீர்கள்?—என்று கேட்டு
ஏந்திழையாள் சுளித்தமுகத் தோடு வந்தாள்.
புதுப்பொன்னே!—என்றிட்டான். ஆமாம், அந்தப்
பொன்னெல்லாம் பேச்சில்தான்; செயலில் இல்லை,
அதிகாரச் சத்தந்தான் வீட்டில், கேட்ட
ஆபரணம் அத்தனையும் கடையில்; வையம்
மதிக்கின்ற நிதியில்லை; நமது வாழ்வோ
மழையிருட்டு; அதில் மின்னல் கூட இல்லை!

விருந்துண்டு வாழ்பவர்கள், தாங்கள் உண்ட,
விருந்துணவு செரிமானம் ஆவதற்கு,
மருந்துண்டு வருகின்றார். ஏழை மக்கள்
வயிற்றுக்குள் நல்லபசி இருந்தும்; உண்ண
ஒரு கவளம் சோறின்றித் தவிக்கின்றார்கள்.
உண்மையிலே இங்கேயும் இதுதான்! தீயில்;
எரிந்துவரும் விறகன்றோ, பொருளில்லாது
ஏங்கிதினம் வாடுகின்ற இளமைக் காலம்!

சித்திரமே! உனக்கில்லா நகையா; இன்னும்,
சிலமாதம் செல்லட்டும் என்றீர். ஆனால்,
எத்தனையோ தடவை இதுபோலச் சொல்லி
ஏமாற்றி விட்டீர்கள் என்னை! கொஞ்சி
முத்தமிடும் போதுமட்டும் ஆசை வார்த்தை
மொழிகின்றீர்; அதுவன்றி இதுநாள் மட்டும்
சத்தமிட்டுப் பயனென்ன? எனது எண்ணம்,
சாகும்வரை நிறைவேறப் போவதில்லை.

கிழவயது, குரங்கழகு, உடையோர் கூட;
கிளிச்சிறைப்பொன் ஆபரணம் அணியுங் காலம்.
பழக்கூடை! பருவமலர்! போன்ற உங்கள்
பத்தினிக்கோ, மூக்குத்தி கூட இல்லை.
தழைத்துள்ள புன்னைமலர் அரும்பை யேனும்
தந்திடுங்கள் மூக்குத்தி என்று! விண்மீன்;
விழுந்தாலும் அதனை ஒரு மாலை யாக்கி
விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வேன்—என்றாள்.

காலுக்கு மேலேஓர் விரியன் பாம்பு,
கடித்தபடி இருக்கின்ற காட்சி போல;
சேலைமலைத் தேன்பூவே! உனது காலில்
சிலம்பிருந்தால், நீ நடக்கும் போது பாடும்.
மாலையிட்ட உன்கழுத்தில், அழகு முத்து
மாலையிட்டால், அம்மாலை; நீயும் நானும்,
நீல இருள் உண்டாக்கி இன்பங் காணும்
நேரத்தில் உறுத்திடினும், வலித்தி டாது?

கரும்புரசம் போல்இனித்து, மருந்து போலக்
கணக்காக வடிக்குஞ்சொல் வழங்கும் மாதே!
பருவத்தால், பழஉதட்டால், பார்வை தன்னைப்
பசியெடுக்க வைத்துவரும் அழகால், ஒவ்வோர்
இரவினிலும் எனைஇனிக்க வைக்கும் போது;
ஏதேதோ கேட்கின்றாய், ஆசை யோடு.
குருத்துநிகர்ப் பட்டுடையும், நகையும், வாங்கிக்
கொடுக்கத்தான் எனக்காசை, என்ன செய்வேன்?

கல்லெடுத்து நட்டுவைக்கச் சொல்லிச் சொல்லிக்
கடவுளென நம்பவைத்துப் பிழைத்து வந்தோம்.
புல்லெடுத்தோம்; தமிழ்நூலில் நெருப்பு வைத்தோம்;
புவிவேந்தன் முன், பெண்ணின் முகத்தை வைத்தோம்.
வில்லெடுத்த ஏகலைவன் என்போன், கட்டை
விரலெடுத்த நம்மரபின் சூழ்ச்சி தன்னை,
எல்லோரும் நன்குணர்ந்து விட்டார்; முன்போல்
ஏய்க்கமுயன் றால் முதுகு வீங்கிப் போகும்!

ஊர்கெடுப்போம்; இது நமது வாழ்க்கை வேலை!
உலைவைப்போம்; இதுநமக்குச் சுலபம்! ஆனால்,
ஏர்பிடித்து உழுவதற்கா தெரியும்? ஏதோ,
இந்நாட்டுத் தமிழரைப்போல் நடிக்கின் றோம்நாம்.
நீர்மீனைத் தின்றுவந்தோம், ராமன் நாளில்.
நிலைபறிந்து, தமிழ்ச்சைவம் பேசு கின்றோம்.
தேர்ந்தெடுத்த மயிலழகே! நாட்டின் மாற்றம்
தெரியாமல் பேசுகின்றாய்—என்று சொன்னான்.

வருத்தத்தைப் பங்கிட்டு; விழியில், நெஞ்சில்,
வதனத்தின் மேற்புறத்தில், வைத்துக் கொண்டு;
இருந்திட்டார் மௌனத்தில் இரண்டு பேரும்.
இருக்கையிலே, முரசுதந்த ஒலியைக் கேட்டார்.
சரியான விடைதந்தால், ஆயி ரம்பொன்
தரப்படுமாம் எனவந்து மைந்தன் சொன்னான்.
விரைவாகப் பாட்டெழுதி முடித்தான் தந்தை
வேந்தனிடம், செய்யுளொடு சென்றான், பிள்ளை.

## தோற்ருன்-வென்ருள்

காதலுக்குப் பஞ்சமில்லை நாட்டில்; ஆனுல்
கல்விக்குத் தான்பஞ்சம்; இல்லா விட்டால்,
பேதையர்போல் இருப்பாரோ? விடையைக் கூறிப்
பெற்றிருக்க மாட்டாரோ பரிசு? விண்ணில்
மாதத்திற் கோர்தடவை மரண மாகும்
வட்டநிலா இரண்டுமுறை இருண்டும், நாட்டில்
மேதையெனப் பேர்பெற்ற நீங்கள் கூட
விழிக்கின்றீர், விடைகூற முடிய வில்லை!

ஊரறிந்த பேரறிஞர்; புலவர்; நீவிர்
உயிரெழுத்தைச் சமயத்தில் மறந்து போவீர்!
பேரறிவு பெற்றிருக்கும் உம்மைப் போன்ற
பெரியோர்க்கு மறதிமிக அதிகம்- அன்ருே?
நீரினிலே முகம்பார்க்கும் அழுக்கு வெள்ளை
நிலவுதனை யாம்பிடிப்போம், என்னும் நீங்கள்;
கூரைதனில் உட்கார்ந்து இருக்கும் சிட்டுக்
குருவிதனைப் பிடிப்பதற்கு முடிய வில்லை.

நாதத்தர், நரைஎன்றால் என்ன? என்றார்;
தண்ணீரின் நோய்என்றீர் - புகழப் பட்டீர்.
சினத்திற்கோர் விளக்கம்யான் கேட்ட போது
சிறுபொழுதுப் பைத்தியந்தான் கோபம் என்றீர்.
இனிமைதனிற் சிறந்ததெது, தமிழா? பெண்ணின்
இதழ்ப்பழமா? எனக்கேட்டேன்-எண்ணம் சொன்னீர்
தினந்தோறும் இதுபோல்என் ஐயந் தன்னைத்
தீர்ப்போர்க்கு இதைத்தீர்க்க முடிய வில்லை!

ஆர்ப்பரித்தான் இவ்வாறு அரசன்; கற்றோர்
அனைவரையும் பார்த்தபடி மன்றந் தன்னில்.
பார்ப்பானின் மூத்தமகன் அங்கே வந்துப்
பாடல்தனை வேந்தனிடம் தந்து நின்றான்.
தேர்வேந்தன் வாசித்தான்; சபையில் உள்ளோர்,
செம்பொன்னைத் தருமியிடம் தருவீர்—என்றார்.
பேர்வாய்ந்த நக்கீரன் மட்டும், பாடல்
பிழையுளது, கொடுக்காதீர் பொன்னை—என்றான்.

கொங்குதேர்வாழ்க் கைஎன்னும் செய்யுள் தன்னில்
குறைஎன்ன நீர்கண்டீர்? கூறும்,—என்று,
தங்கமுடித் தமிழரசன் கேட்க, "இந்தத்
தமிழ்ப்பாடல் பொருட்குற்றம் உடைய" தென்று,
அங்குள்ளோர் அனைவர்க்கும் விளக்கம் தந்து,
அரசாங்கப் பரிசுதனை; கப்ப லுக்கோர்
நங்கூரம் இட்டதுபோல் நிறுத்தி விட்டான்,
நல்லதமிழ்க் காவியங்கள் இயற்றும் கீரன்.

கிடைப்பதனைக் கெடுத்தன்றோ விட்டான். இந்தக்
கீரனெனும் படுபாவி! எனக்கு இங்கே,
தடைக்கல்லாய், பகைச்சொல்லாய், இருப்போன்; இந்தத்
தமிழ்க்குள்ளன்; இனி இவனைப், பதுங்கி நின்று,
நடக்கையிலே சுருக்கென்று முள்போல் குத்தி,
நரித்தனத்தால் வழிவாங்க வேண்டும்—என்று,
வடக்குநதி விட்டுவந்த பார்ப்பான் மைந்தன்
மனத்தினிலே திட்டமிட்டுத் திருப்பிச் சென்றான்.

பெண்ணொருத்தி, அவன்சென்ற பின்னர், கல்விப்
பெருஞ்சபைக்கு வந்துஒரு ஓலை தந்தாள்.
எண்ணங்கள் வைத்தெழுதும் கீரனாரே,
இச்செய்யுள் சரிதானா?—என்றான் வேந்தன்.
பண்சிறப்பும்; பாட்டினது சிறப்பும் பார்த்தால்,
பரிசுதரல் இவளுக்கே பொருந்தும்—என்று,
மண்ணாளும் மன்னனிடம், கீரன் சொன்னான்.
மற்றவரும் அம்முடிவை ஒப்புக் கொண்டார்.

சமைக்கத்தான் பெண்டிர்க்குத் தெரியும், என்ற
தம்பட்டப் பேச்சுதனைப் பொய்க்க வைத்த,
அமுதுக்கு நிகரான அணங்கே! இந்தா
ஆணிப்பொன் பெற்றுக்கொள்; என்று ஈந்து,
சமுத்திரத்தின் வெண்முத்தை மேலும் வாரித்
தந்திட்டான் மங்கையிடம், மதுரை மன்னன்.
தமிழ்க்கவிதை தனைநன்கு வளர்க்க, இன்றோர்
தமிழச்சி கிடைத்திட்டாள்!—என்றான் கீரன்.

பரிசளிப்போ ஆயிரம்பொன்; அதுவோ செம்பொன்;
பாவையவள் நல்லுடலும், மின்னும் செம்பொன்;
வரிவிழியாள் வளைக்கரத்தில் முத்து; மங்கை
வாயிதழின் உட்புறத்தும் முத்து; கீரன்,
தெரிவித்த வாக்கியமோ, நல்ல தீர்ப்பு;
தேன்மொழியாள் புதுப்பாட்டும், நல்ல தீர்ப்பு;
அரசனுக்கும் ஆனந்தம்; பரிசு பெற்ற
அணங்குக்கும், புகழாலே பேரானந்தம்.

தென்கடலின் வெண்முத்து தன்னை-எட்டுத்
திசைபுகழும் பேரரசன் ஈந்த பொன்னை-
அன்னநடைப் பெண்ணரசி, பரிசு பெற்று,
அகங்குளிர, முகம்மலர, அங்கே, நின்றாள்.
மன்னவனே ஓர்வார்த்தை தமிழ்ச்சங் கத்தில்
மங்கைக்கும் இடமளிப்போம்—என்றான் கீரன்.
என்ன இது, சர்க்கரையின் அருகில், செந்தேன்
இருப்பதற்கா தடைசெய்வேன்—என்றான் வேந்தன்.

இன்றுமுதல் நமது தமிழ்ச் சங்கந் தன்னில்
இவளுக்கும் இடந்தந்தோம் என்றான் வேந்தன்.
நன்று நன்று எனறிட்டார் சபையோர்; மன்னன்
நங்கைதனைப் புலவரிடை அமரச் செய்தான்.
குன்றுகளின் இடையிலொரு மான்போல்; மேகக்
கூட்டத்தின் நடுவிலொரு வான வில்போல்,
மின்னிடையாள் மன்றத்தில் காட்சி தந்தாள்,
வெண்ணிலவைத் தன்முகத்தால் அங்கு தந்தாள்.

## தேய்ந்த கனவு

இந்நேரம் சென்றிருப்பான் மைந்தன்; பாட்டு
ஏடுதனைத் தந்திருப்பான், சங்கந் தன்னில்;
இந்நேரம் கவிஞர்களின் கண்கள் பார்க்கும்;
இதயங்கள் வாசித்துக் கொண்டிருக்கும்.
இந்நேரம் தீர்ப்பளித்துப் பரிசுப் பொன்னை
இந்தாநீ பெற்றுக்கொள் என்றிருப்பர்.
இந்நேரம் பொன்பெற்று பூரிப் போடு,
எனதும்மகன் திரும்பிக்கொண் டிருப்பான் வீடு!

என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.
எழிலரசி சிவன்மனைவி! சிவனோ; வீட்டுச்
சன்னல்தனைத் தேடிவரும் காற்று போலத்
தானாக வந்திடுவர் பொருளிருந்தால்—
என்றதொரு எண்ணத்தில் ஆழ்ந்திருந்தான்.
இருவரும்இவ் வாறிருக்கும் போது, மன்னன்
மன்றத்தில் தான்பெற்ற தோல்வி யோடும்,
மனத்தினிலே சோர்வோடும் வந்தான் மைந்தன்!

பதைப்போடு எதிர்நின்ற மகனைப் பார்த்துப்
பார்வதியாள், "பாட்டென்ன ஆயிற்" றென்றாள்.
முதிராத ஓர்விதையை, நிலத்தில் நட்டால்,
முளைத்திடுமா எங்கேனும்?" என்று, கூறிப்
புதிதாக நீர்எழுதித் தந்த பாடல்
பொருட்குற்றம் உடையதுவாம் அப்பா—என்றான்.
கொதித்திட்டான் பரமசிவன், 'கவிதை எங்கே
கொடுஅதனை' எனப்பெற்று விரைந் தெழுந்தான்!

காற்றுதனில் தென்றல்போல்; வீரர் ஏந்தும்
கருவிதனில் கூர்வாள்போல்; உறுப்பில் கண்போல்;
ஆற்றலிலும் அறிவினிலும் சிறப்பு வாய்ந்த
அதிமுதன் நமைவிட்டுப் பிரிந்து விட்டார்.
நேற்றிருந்தார் நம்மோடு; இன்று வெந்து
நீரானார் இடுகாட்டில்; அவருக் காகப்
பாற்றெளித்துப் பயனில்லை; அவரைப் போலப்
பைந்தமிழ்க்குப் பெருந்தொண்டு புரிதல் வேண்டும்.

வீட்டுக்கு நிதிசேர்த்துக் கொடுப்பர், வைர
விழாநடக்கும்; பொன்னாடை பெறலாம்; என்று,
நாட்டுக்கு அவர் தொண்டு செய்ய வில்லை.
நற்றமிழ்க்கு வியாபாரி ஆக வில்லை;
ஆட்டுவித்தால் ஆடுகின்ற அடிமை; கோழை;
அவர்போன்றோர் முதுகெலும்பு நிமிர்வ தற்குப்
பாட்டெழுதிக் காட்டியவர்; இலக்கி யத்தில்,
பகுத்தறிவைப் புகுத்தியவர்; கர்ம வீரர்.

தானியங்கள் முளைக்காமல் போவ தில்லை!
தனித்திறமைப் புதுமைகளும் சாவ தில்லை!
ஆனதினால், அவர் தந்த புதுமை நூற்கள்;
அத்தனையும் உயிர்வாழும்; அந்த நூற்கள்;
சீனத்திற் சென்றாலும், புவியின், மற்ற
தேசத்திற் சென்றாலும், அங்கு உள்ளோர்,
யானை தந்த தந்தமிது என்பர் அன்றி,
யாருமதைப்—பன்றியின்பல்—என்று கூறார்.

காவியத்தால் நாட்டுக்கு நன்மை செய்யக்
கருதிடுவோர், ஈசலைப்போல், அற்ப நாளில்
ஆவியற்றுப் போகின்ற நூற்கள், நூறு
அளிப்பதனாற் பயனில்லை! பெருமை இல்லை.
பூவுலகோர் சிந்தித்து மதிக்கத் தக்கப்
புதுஎண்ணம்—வாடாத திறமை—சேர்த்துச்
சாவதற்குள் குறைபில்லாப் பெருநூல் ஒன்று
தந்திட்டால், புகழ்நிலைக்க அதுவே போதும்.

இறந்துபட்டும் இறவாத பூதன், ஏட்டில்
எழுதிவைத்த கடைசிப்பாட்டிதுதான். இன்று;
துறவியையும் அழவைத்து விட்ட தன்தூ
தூயதமிழ்ப் பெரியாரின் மரணம்---என்று,
மறுவில்லா நக்கீரன் ஓர்கூட்டத்தில்
மனங்கலங்கிப் பேசிக்கொண்டிருந்த போது,
வறுமையுள்ள புலவனைப் போல் வேடமிட்டு
வந்திட்டான் பரமசிவன் விரைந்து ஆங்கே!

தெக்கணத்துப் பேரறிஞன் கீரன் தன்னைச்
சிவன்கோவில் சிலைகளும் பார்ப்பான் பார்த்து,
நக்கீரன் நீர்தானோ?- என்றான். அந்த
நற்புலவன், நான்தான்காண் கீரன்-என்றான்.
இக்கணமே; கூந்தலுக்கு இயற்கை வாசம்
இல்லைஎன்ற வாதத்தைத் தொடங்கும்—என்றான்.
மக்களங்கே, பேசாத பதுமை யானார்,
வந்தவனே மறுபடியும் தொடர்ந்தான் பேச்சை.

கூந்தலுக்கு இயற்கைமணம் கிடையாதென்று
கூறியதை மறுக்கின்றேன்; கரிய வண்டு,
மாந்தளிரை; ஓலைதனைத் தொடுவதில்லை,
மணம்வீசும் பொருள்மீதே வண்டு மொய்க்கும்.
ஈந்துதரும் இலைபோல, மணமில்லாது
எழில்மாதர் கருங்கூந்தல் இருக்குமானால்,
பூந்தாது உண்டுஉயிர் வாழும் வண்டு,
பூங்குழலில் மொய்ப்பானேன்?- என்று கேட்டான்,

எழில்மலரால், இளந்தென்றல் மணக்கும் அன்றி
இயற்கையிலே காற்றுக்கு வாசம் இல்லை.
மழைப்பருவ மேகத்தைப் போலிருக்கும்
மங்கையரின் இளங்கூந்தல்; மலரின் கூட்டம்
வழங்குகின்ற வாசனையைப் பெறுவதின்றி,
மற்றதற்குச் சுயமாக வாசம் இல்லை.
சழக்குடையோய்! சர்க்கரையின் சேர்க்கையின்றித்
தாளைக் குடிதண்ணீர் இனிப்பதுண்டோ?''

என்றந்த நக்கீரன் திருப்பிக் கேட்டான்.
எதிர்நின்ற பூணூலன் ஊமையானான்;
மன்றத்தில்; பேசாமல் தருமி தோற்றான்.
வாதிட்டுப் பரமசிவன் தெருவில் தோற்றான்.
வென்றதங்கே நக்கீரன் நாக்கு; தோற்ற
வேதியனின் கால்அங்கே எடுத்த தோட்டம்,
ஒன்றுபட்டுக் கைகொட்டிச் சிரித்தார்! பார்ப்பான்
ஒட்டிவந்த பொய்மீசை வீழ்ந்த தாங்கே!

தமிழ்ரெலாம் வீரத்தை விளக்கிக் காட்டத்
தன்முகத்தில் சுயமீசை வைத்துக் கொள்வர்.
இமயமலை அடிவாரம் விட்டு வந்தோர்
ஏய்ப்பதற்கு, வேரில்லா மீசை வைப்பர்.
அமுதாங்கப் பாண்டியர்க்கு மீசை உண்டே,
அதுபோல, ராமனுக்கு உண்டா மீசை?
சமுதாயந் தனைக்கெடுக்கும் பார்ப்பான், மீசைத்
தந்திரத்தைப் பார்த்தீரா? - என்றான் கீரன்.

வெற்றிதனை மட்டுந்தான் இவ்விடத்தில்
விட்டுவிட்டுச் சென்றுள்ளான் என்றிருந்தேன்;
மற்றிங்கே பார்த்தீரா? உம்மிடத்தில்,
வாதமிட்டு ஓடியவன் மீசை - என்று,
கற்றறிருந்த கீரனிடம் ஒருவன் வந்து,
காட்டலுற்றான் அந்தப்பொய் மீசை தன்னை,
சுற்றிநின்றோர் அதைக்கண்டு சிரித்தார், அந்தத்
தூயதமிழ்ப் பெருங்கவியும் சிரித்துக் கொண்டான்!